கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

## TAMIL

வகுப்பு ⑩

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

**முன்னுரை**

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

# உள்ளடக்கம்


- சொற்பொழிவுரை
- பாராட்டுரை
- கடிதம் (அலுவலகக் கடிதம்)
- தலையங்கம்
- ஒப்பீடு
- ஒலிப்பெருக்கி அறிவிப்பு
- கட்டுரை
- நயம் பாராட்டுதல்
- விமர்சனம்

# சொற்பொழிவுரை

ஒரு பொருண்மையில் பேச விரும்பும் கருத்துகளைத் தொகுத்து விரிவாக உரைக்கும் நிலையில் அமைவதே சொற்பொழிவு என்னும் மொழி வெளியீட்டு வடிவம்.

சொற்பொழிவு தயார் செய்யும் முறை

- தகவல்களைத் திரட்டுதல்.
- திரட்டிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- பொருத்தமான மேற்கோள்களைக் கண்டறிதல்.
- அவைக்கு வணக்கம் மற்றும் நன்றியைக் கூறி முகமன் இடம்பெறும் வகையில் அமைதல்.
- அவையில் பேசத் தகுந்த மொழிநடையைக் கையாண்டு திரட்டிய தகவல்களைக் கோர்வையாகத் தொகுத்து எழுதுதல்.

சொற்பொழிவின் முக்கியக் கூறுகள்

- முகமன் கூறுதல்
- கருத்துகள்
- மேற்கோள்
- மொழிநடை

- "தமிழ் மொழியின் இலக்கிய வளம்" என்ற தலைப்பில் சொற்பொழிவுரையைத் தயார் செய்வோம்.

## தமிழ் மொழியின் இலக்கிய வளம்

அன்னை மொழியே! அழகாய் அமைந்த செந்தமிழே! எழில்சார் கன்னியாய் என்றும் திகழும் தமிழ் அன்னையே போற்றி! அவையோர் அனைவருக்கும் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு "தமிழ் மொழியின் இலக்கிய வளம்" என்னும் தலைப்பில் உரையாற்ற விழைகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு உயர்வாய் விளங்கும் மொழி. ஏனைய உலக மொழிகளில் பயிலப்படுகின்ற இலக்கணங்கள் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே வழி வகுத்துக் கொடுத்தன. ஆனால் நம் தாய் மொழியாம் அருந்தமிழில் தான் வாழ்வுக்கும் இலக்கணம் அமைத்துக் கொடுத்தார் தொல்காப்பியர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதாவதெங்கும் காணோம்" என்றார் பாரதியார். ஆம். அது முற்றிலும் உண்மை. தமிழ் மொழியின் இனிமையை உணரும்போது தான் அதன் சுவை நமக்குப்

புலனாகும். கற்கண்டு இனிமையானது என்ற உடனேயே அதன் சுவையை உணர முடியுமா? அதனை உண்ணும்போதே அதன் சுவையை உணர முடியும். தமிழும் அவ்வாறுதான். தமிழுக்கு இன்னொரு சிறப்பு முத்தமிழ் ஆகும். முத்தமிழை மூன்றாகப் பிரிப்பர். இம்மூன்று பிரிவுகளை இயல், இசை, நாடகம் என்று கூறலாம். உரைநடை இலக்கியங்களைக் குறிப்பது இயல் தமிழ். இவை எண்ணத்தை வெளிப்படுத்த உதவும். இசைப் பாடல்களைக் குறிப்பது இசைத் தமிழ். உள்ளத்தை உருக்கி நெகிழச் செய்யும் வல்லமை உடையது. முத்தமிழின் இறுதியான பிரிவு நாடகம் ஆகும். இப்பகுதி பேச்சாலும் நடிப்பாலும் வெளிப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும்.

வேறு மொழியில் இல்லாத சிறப்பு தமிழில் இருக்கிறது. தமிழ் மொழி ஒன்றின் பருவ காலப் பெயர்களைச் சுட்டிக் காட்டும் தன்மையது. உதாரணமாக ஒரு இலையைக் கொழுந்து, தளிர், இலை, பழுப்பு, சருகு என பல பருவங்களாக அழைப்பர். கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்று உலக மக்கள் அனைவரையும் சகோதரர்களாகப் பார்க்கும் உயரிய பண்பினைக் கொண்டது.

இதுவரை நம் தமிழ் இலக்கிய வளத்தின் சில கூறுகளை மட்டுமே உங்கள் முன்பு எடுத்துக் கூற முடிந்தது. தமிழ் மொழியை இன்னும் இன்னும் ஆழமாகப் படித்தால் இதன் வளமையும் செழுமையும் புலனாகும். இந்த உரையை ஆற்ற நல்ல வாய்ப்பை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

- "கதைப்பாடலின் சிறப்புகள்" என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்வோம்.

கதைப்பாடலின் சிறப்புகள்

- தயார் செய்த சொற்பொழிவைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப்  படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# பாராட்டுரை

ஒருவரின் நல்ல செயல்களையும் படைப்புகளையும் எடுத்துக்கூறி அவரைப் பாராட்டுவதை பாராட்டுரை எனலாம்.

பாராட்டுரை தயார் செய்யும் முறை

- பாராட்ட வேண்டிய நபரைப் பற்றிய முன்னறிவு இருக்க வேண்டும்.
- அவரது சாதனை, சேவை, சிறப்பியல்புகள், படைப்புகள், தனித்திறன், விருதுகள் போன்றவற்றைத் திரட்ட வேண்டும்.
- அவைக்கு வணக்கம் மற்றும் நன்றி கூறுகின்ற முகமன் முறையில் பாராட்டுரை இடம்பெற வேண்டும்.
- அவையில் பேச வேண்டிய மொழிநடையைப் பின்பற்றுதல் நலம்.

சொற்பொழிவின் முக்கிய கூறுகள்

- முகமன் கூறுதல்
- கருத்துகள்
- மொழிநடை

◆ பள்ளி மாணவர் கலைவிழாவில் கவிதை மொழிதல் போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவியைப் பாராட்டி பாராட்டுரை தயார் செய்வோம்.

| பாராட்டுரை |
| --- |
| அவைத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் அவர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! சக மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.<br><br>நமது பள்ளி மாணவி கவிதா அவர்கள் மாநில அளவில் நடைபெற்ற கவிதை மொழிதல் போட்டியில் வெற்றியைக் கைப்பற்றினார். கவிதை சொல்லும் திறன் மட்டுமல்ல. சிறந்த படைப்பாற்றல் திறன் கொண்டவர். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் வழிகாட்டுதலுடன் மிகச் சிறப்பாக தனது திறனை வெளிப்படுத்தி சாதனை படைத்துள்ளார். தனது பெற்றோருக்கும் நம் பள்ளிக்கும் நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் கூறிக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம். |

- மரம், செடி, கொடிகள் எதுவும் வாழ வாய்ப்பின்றி வெறும் மணல் தீவாக இருந்த முஜூலித் தீவைத் தனது கடும் முயற்சியால் அடர்ந்த காடாக மாற்றிய ஜாதவ் அவர்களைப் பாராட்டி உரை தயாரிப்போம்.

| பாராட்டுரை |
| --- |
| |

- தயார் செய்த பாராட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# அலுவலகக் கடிதம்

அலுவலகங்களைச் சார்ந்து எழுதப்படுகின்ற கடிதங்களை அலுவலகக் கடிதங்கள் எனலாம்

அலுவலகக் கடிதம் எழுதும்போது கலனிக்க வேண்டியவை:

- அனுப்புநர், பெறுநர் எழுதும்போது முற்றுப்புள்ளியோ(.) காற்புள்ளியோ(,) போடக்கூடாது.
- அனுப்புநர் மற்றும் பெறுநர் - இல் இடம்பெறும் முகவரி ஒவ்வொன்றின் இறுதியிலும் காற்புள்ளியிட்டுக் கடைசியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.
- பெறுநர் என்னும் முகவரிப் பகுதியில் பெயர் இருந்தால் திரு என்று எழுத வேண்டும். பெயரில்லாமல் பதவி இருப்பின் திரு, உயர்திரு மற்றும் அவர்கள் என எதுவும் போடக்கூடாது.
- ஐயா / அம்மையீர் என்னும் பகுதியில் பெறுநரில் உள்ளவர் ஆண் / பெண் எனத் தெரியாமல் இருந்தால் மேற்கண்டவாறு இரண்டுமே போட்டுக் கொள்ளலாம். உங்களுக்குத் தெரியும் எனில் ஒன்றை மட்டும் போட்டுக் கொள்ளுங்கள்.
- ஐயா/அம்மையீர் என்னும் இடத்தில் காற்புள்ளி(,) வைத்தல் அவசியம்.
- பொருள் என்னும் இடத்தில் முக்காற்புள்ளி(:) வைத்தல் வேண்டும். நாம் பெறுநரிடம் என்ன கேட்கின்றோமோ அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி - தொடர்பாக என முடிக்க வேண்டும்.
- தொடர்பாக என்பது இதைப்பற்றி இன்னும் பேசப் போகின்றேன் எனப் புரிந்து கொள்ளலாம்.
- பொருள் பகுதியில் நாம் என்ன சொல்ல வேண்டும் என நினைக்கின்றோமோ அவற்றைத் தெளிவான முறையில் சொல்ல வேண்டும்.
- பொருள் ஆரம்பிப்பதற்கு முன்னால் வணக்கம் என்று குறிப்பிடுவது சிறப்பு.
- வணக்கம் கூறிவிட்டால் முடிவில் நன்றி கட்டாயம் இடம்பெற்றிருத்தல் வேண்டும். தாழ்ந்த என்று பயன்படுத்த வேண்டாம். 'பணிவு' என்று பயன்படுத்தலாம்.
- கையெழுத்து போடுகின்ற பகுதியில் தங்கள் உண்மையுள்ள என்றே பயன்படுத்த வேண்டும்.
- இப்படிக்கு தங்கள் அன்புள்ள என்று போடுதல் கூடாது.
- இறுதியில் காற்புள்ளி (,) வைத்தல் அவசியம். அது வலப்பக்கத்தில் இருத்தல் வேண்டும்.
- இடப்பக்கத்தில் இடம் நாள் என்பவையும் இடம்பெற்றிருத்தல் அவசியம்
- தங்கள் உண்மையுள்ள என்பதன் கீழ் கையெழுத்து போட வேண்டும். அதற்குக் கீழ் அனுப்புநரின் பெயரினைத் தெளிவான முறையில் எழுதுதல் வேண்டும்.

- நமது ஊரில் குடிநீர்த் தட்டுப்பாடு மிகக் கடுமையாக உள்ளது. இதை மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரி விண்ணப்பம் தயார் செய்வோம்.

அலுவலகக் கடிதம்

அனுப்புநர்
உங்கள் பெயர்,
வீட்டுப் பெயர்,
முகவரி.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
பாலக்காடு.

மதிப்பிற்குரிய ஐயா/அம்மையீர்,
பொருள் : குடிநீர் வசதி செய்து கொடுப்பது தொடர்பாக

வணக்கம்.

எங்கள் ஊரில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. எங்கள் ஊரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தினசரி குடிநீர்த் தேவைக்காக இரண்டு கிலோமீட்டருக்கு மேல் சென்று எடுத்து வர வேண்டியுள்ளது. எனவே எங்களுக்கு குடிநீர் வசதி செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்

நன்றி.

இப்படிக்கு
இடம் தங்கள் உண்மையுள்ள
நாள் கையொப்பம்
பெயர்

- நமது பள்ளிக்கு அருகாமையிலுள்ள சாலையோரத்தில் சிலர் தொடர்ந்து குப்பை போடுவதால் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு ஏற்படுகிறது. இதை நகராட்சிக்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கக் கோரி விண்ணப்பம் தயார் செய்வோம்.

அலுவலகக் கடிதம்

| |
|---|
| அனுப்புநர்<br><br><br>பெறுநர்<br><br><br>ஐயா,<br><br>பொருள்:<br><br>வணக்கம்.<br><br><br><br><br><br><br><br><br><br>இடம்<br>நாள் தங்கள் உண்மையுள்ள, |

- தயார் செய்த அலுவலகக் கடிதத்தைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# தலையங்கம்

இதழ்களில் இடம்பெறும் செய்திகளுக்கெல்லாம் தலையானதும் பத்திரிகை ஆசிரியரின் எழுத்தாகவும் அமைவது தலையங்கம் எனப்படும்.

தலையங்கம் தயாரிக்கும் முறை

- தலையங்கம் எந்த விருப்பு வெறுப்புமின்றி நடுநிலையோடு அமைதல் வேண்டும்.
- தலைப்பு ஒரு தலையங்கத்தின் முழு கருத்தையும் விளக்கும் வகையில் செறிவாக அமைய வேண்டும்.
- சமகால பிரச்சினையைத் தலையங்கத்தின் முக்கிய பொருண்மையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
- பிரச்சினை விளக்கம், அலசி ஆராய்தல், பகுப்பாய்வு, தீர்வு என்ற நிலைகளில் தலையங்கம் எழுதப்பட வேண்டும்.
- விரிவாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

- நாட்டுப்புறக் கலைகள் நலிவடைவதற்கான காரணங்களையும் அதற்கான தீர்வையும் வலியுறுத்தி பத்திரிகைக்குத் தலையங்கம் தயார் செய்வோம்.

## நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவோம்

நாட்டுப்புற மக்கள் வாழ்வியலின் வெளிப்பாடே நாட்டுப்புறக் கலைகள். நாட்டுப்புற கலைகள் நலிவடைகின்றன என்றால் நமது பண்பாடும் கலாச்சாரமும் நலிகிறது என்றே பொருள். பண்டைக் காலத்தில் நாட்டுப்புறக் கலைகளைப் பொழுதுபோக்கிற்காக மட்டும் பயன்படுத்தவில்லை. நாட்டுப்புறக் கலைகள் செய்தி ஊடகங்களாகவே பார்க்கப்பட்டன. நாட்டுப்புறக் கலைகளில் சமூக வளர்ச்சிக்கும் மக்களின் மனவெழுச்சிக்கும் தேவையான கருத்துகள் இடம்பெற்று இருந்தன.

தற்காலத்தில் மேலை நாட்டு நாகரிகத் தாக்கத்தால் நமது பண்பாடு கராச்சாரஙகளின் அடையாளங்களான நாட்டுப்புறக் கலைகள் நலிவடைவது வேதனைகுரியதாகும். நாம் அனைவரும் சமூக அந்தஸ்து என்ற நிலையில் நாட்டுப்புறக் கலைகளை இரண்டாம் தரமாகக் கருதுகிறோம். பரதநாட்டியம், மோகினியாட்டம் போன்ற செவ்வியல் கலைகளைக் கற்பதை நாம் உயர்வாகக் கருதுகிறோம். மேலும் நாட்டுப்புறக் கலைகளை முறையாகக் கற்றுக் கொடுக்கிற அமைப்பு இல்லை. நாட்டுப்புறக் கலைஞர்களுக்குப் போதிய வருமானம் கிடைப்பதும் இல்லை. இளம் தலைமுறையினர் பாரம்பரிய கலையைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதும் இல்லை. தகவல் தொழில் நுட்ப ஊடகங்களான திரைப்படம், தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் போன்றவற்றில் இன்றைய தலைமுறையினரின் முழுமையான ஈடுபாடு போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டுப்புறக் கலைகள் நலிவடைகின்றன.

நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாப்பதன் மூலம் நமது கலாச்சாரம், பண்பாடு அழியாமல் பாதுகாக்க முடியும். திரைப்பட நடிகர்களை அழைப்பதுபோல நாட்டுப்புறக் கலைஞர்களையும் அழைத்து விழா நடத்த வெளிநாடு வாழ் இந்தியர்கள் முன்வர வேண்டும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் விழாக்களில் நாட்டுப்புறக் கலைஞர் மற்றும் நாட்டுப்புறக் கலைகளை உட்படுத்துதல் நன்று. கலைஞர்களுக்கு வீட்டு வசதி, ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் முன் வர வேண்டும்.

பள்ளி, கல்லூரிப் பல்கலைக்கழகக் கலைவிழாக்களில் நாட்டுப்புறக் கலைகளையும் உட்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். கல்லூரி, பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் நாட்டுப்புறக் கலைகளையும் உட்படுத்தி அதைப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். கிராமங்களைச் சார்ந்து நாட்டுப்புறக் கலைகளைக் கற்றுக் கொடுப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் தீட்ட வேண்டும்.

மாணவர்களாகிய நாம் பொதுமக்களிடையே நாட்டுப்புறக் கலைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் விதம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது, துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டு கலைகளைக் கற்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். பள்ளி விழாக்களில் நாட்டுப்புறக் கலைஞர்களை அழைத்துக் கௌரவிப்பதோடு அவர்களோடு கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது நலம் பயக்கும்.

- இயற்கை வேளாண்மை நலிவடைந்து வரும் இக்காலத்தில் அதைக் காப்பதற்கான தேவையை வலியுறுத்திப் பத்திரிகைக்குத் தலையங்கம் தயார் செய்வோம்.

தலையங்கம்

- தயார் செய்த தலையங்கத்தைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# ஒப்பீடு

ஒரு பொருளின் தனித்தன்மைகளை அல்லது சிறப்புகளை அறிவதற்கு அதனை அதனோடு ஓரளவு ஒத்த இன்னொரு பொருளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நம்முடைய இயல்பு. அதனை நாம் ஒப்பீடு என்று கூறலாம். கவிதைகள் கலைகள், கதாபாத்திரங்கள் போன்றவற்றை ஒப்பீடு செய்யும் நிலையில் பல செயல்பாடுகள் நம் பாடப்பகுதியில் உள்ளன.

ஒப்பீடு தயார் செய்யும் முறை

- ஒரே கருத்தை வேறுபட்ட வகையில் கையாண்ட இரு படைப்புகளை ஒப்பிட்டுக் கூறும் நிலை
- இரு படைப்புகளின் பொருளையும் உட்கொள்ளுதல் வேண்டும்.
- இரு படைப்புகளின் பொதுத் தன்மையையும் கண்டறிதல் வேண்டும்.
- படைப்பாளன் கூறிய கருத்தை இன்றைய கால கட்டத்தில் பொருத்திப் பார்க்கும் நிலையிலும் ஒப்பீடு செய்வது உண்டு.
- மாணவனின் சொந்த கருத்தையும் வெளிப்படுத்துதல் சிறப்பானது.

◆ கூன் விழுந்த மூதாட்டியை
பேருந்து நடத்துனர் பெருசு ஏறு சீக்கிரம்
என்று கூறாமல் கைப்பிடித்து
ஏற்றிக் கொள்வதைக் காணும்போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்

என்னும் பாடல் வரிகளை இன்றைய சூழலோடு ஒப்பிட்டு எழுதுவோம்.

## ஒப்பீட்டுக்குறிப்பு

முதியவர்களின் இன்றைய நிலை

"தாயிற்சிறந்த கோயிலும் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்றெல்லாம் பெற்றோர்களுக்குப் புகழாரம் சூட்டும் நம் நாட்டில் தான் இன்று பெற்றோர்களை முதியோர் இல்லத்துக்கு அனுப்பும் அவல நிலை நிலவுகிறது. முதியோர்களுக்கு நாம் அவர்களின் தேவைகளை அறிந்து உதவி செய்வதில்லை. முதியோர்களை இன்றைய சமுதாயம் சுமையாகப் பார்க்கின்ற நிலை இன்று நிலவுகிறது.

பாடலில் இடம்பெறும் நடத்துநர் பாட்டியை அன்புடன் நடத்துகிறார். அவர் மனித நேயத்துடன் நடந்துகொள்கிறார். ஆனால் இன்றைய சமுதாயம் மனித நேயத்துடன் செயல்படுவதில்லை. நம் வாழ்க்கையில் நாம் முதியவர்களை ஆதரித்து நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

- குளிரில் நடுங்கும் பாதையோர
  முதியவருக்கு வீட்டுத் திண்ணையில்
  இடம் கிடைத்தால்
  முடங்கி உற்கும் அவரைக்
  காணும் போது
  என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்

  என்னும் பாடல் வரிகளை இன்றைய சூழலோடு ஒப்பிட்டுக் குறிப்பு தயார் செய்வோம்.

ஒப்பீட்டுக் குறிப்பு

| முதியோரைப் பாதுகாப்போம் |
| --- |
| |

- தயார் செய்த ஒப்பீட்டுக் குறிப்பைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப்  படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# ஒலிப்பெருக்கி அறிவிப்பு

நெருக்கடியான காலகட்டத்தில் பொதுமக்களுக்குத் தகவல்களைப் பரிமாறுவதற்கு ஒலிப்பெருக்கி அறிவிப்பைப் பயன்படுத்துகிறோம்.

ஒலிப்பெருக்கி அறிவிப்பு தயார் செய்யும் முறை

- பொதுமக்களுக்கு ஒரு கருத்தைக் அறிவிக்கும் நிலையில் அமைதல் வேண்டும்.
- அன்புடையீர் / அன்பர்களே / பெரியோர்களே. . . தாய்மார்களே. . போன்ற அழைப்புச் சொற்கள் இதில் இடம்பெற வேண்டும்.
- பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிலையிலோ அரசாங்க கட்டளைகளை அறிவிக்கும் நிலையிலோ ஒலிப்பெருக்கி அறிவிப்பு அமைவதுண்டு.

- பரவி வரும் பெருந்தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்க முகக் கவசம் அணிவது மிகவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையில் ஒலிப்பெருக்கி அறிவிப்பு தயார் செய்வோம்.

ஒலிப்பெருக்கி அறிவிப்பு

அன்பிற்கினிய பெரியோர்களே. . . .தாய்மார்களே . . . நண்பர்களே. . .

நமது நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் இதிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முகக் கவசம் அணிவது மிகவும் அவசியம். எனவே அனைவரும் கட்டாயமாக முகக் கவசம் அணிந்து வெளிளில் வர வேண்டும். மீறினால் காவல் துறையினர் ரூபாய் 500 அபராதம் விதிப்பர். மேலும் பொது இடங்களில் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும். முகக் கவசம் அணிந்து நம்மையும் பிறரையும் பாதுகாப்போம்... பொறுப்புடன் நடந்து கொள்வோம்.

- காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாகஅரபிக் கடலில் கடல் சீற்றம் அதிகமாக உள்ளது. எனவே மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவிக்கும் விதமாக ஒலிப்பெருக்கி அறிவிப்பு தயார் செய்வோம்.

ஒலிப்பெருக்கி அறிவிப்பு

- தயார் செய்த ஒலிப்பெருக்கி அறிவிப்பைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப்  படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# கட்டுரை

ஒரு பொருண்மையைப் பற்றிய கருத்துகளை காரண காரணத்தோடு அலசி ஆராய்ந்து விரிவாகவும் தெளிவாகவும் வெளியிடும் ஒரு மொழி வெளியீட்டு வடிவமே கட்டுரை

கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டியவை

- முன்னுரை, முடிவுரை, துணைத்தலைப்புகள் போன்றவற்றை அமைத்து எழுத வேண்டும்.
- முன்னுரையில் கட்டுரை அமைய இருக்கும் கருத்துகள் அல்லது பொருள் குறித்த அறிமுகமாக அமைய வேண்டும்.
- தலைப்பிற்குப் பொருத்தமான துணைத்தலைப்புகள், கருத்தோடு பொருத்தமுடையதாக இருத்தல்வேண்டும்.
- மேற்கோள்கள் இடம் பெற்றால் கட்டுரையின் அமைப்பு மிகச் சிறப்பாக இருக்கும்.
- மேற்கோள் கட்டுரையின் பொருள் விளக்கத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
- முடிவுரையில் கட்டுரையின் ஒட்டு மொத்த கருத்துகளும் சுருக்கமாகக் கூறும் நிலையில் அமைக்க வேண்டும்.
- எழுத்துப்பிழை, கருத்துப்பிழை, வாக்கியப்பிழைகள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- சிறுசிறு வாக்கிய அமைப்பாக இருப்பது நல்லது.
- தெளிவான மொழிநடையில் கட்டுரை அமைவது சிறப்பு.

- "ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சி தரும் இயற்கை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுவோம்.

## ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சி தரும் இயற்கை

இயற்கை, மனித வாழ்வுக்கு மிகவும் தேவையான ஒன்றாக விளங்குகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகிய அனைத்தும் இயற்கையாலேயே அமைகின்றன. இயற்கை நம் ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் பாங்கினை இக்கட்டுரையின் வழி காண்போம்.

ஐம்புலன்கள்

மனிதனுக்கு உணர்வைத் தரும் உறுப்புகளையே புலன்கள் என்கிறார்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன மனித உடலிலுள்ள ஐந்து புலன்கள் ஆகும். மெய் - தொடுதல் உணர்வு,

வாய் - சுவைத்தல் உணர்வு, கண் - பார்க்கும் தன்மை, மூக்கு - நுகரும் தன்மை, செவி - கேட்டல் உணர்வு என ஐம்புலன்கள் நாம் அன்றாட வாழ்க்கை முறையுடன் மிக நெருங்கிய தொடர்புடையன.

ஐம்புலன்களும் இயற்கையும்

இயற்கை ஐம்புலன்களுக்கும் விருந்தாக அமைகிறது. நாம் இயற்கையில் அனுபவிக்கும் மழை, குளிர், தென்றல் போன்றவை நம் மெய்க்கு இன்பம் தருவதாக அமைகிறது. இயற்கையிலிருந்து நமக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களான காய்கனிகள், கரும்புச்சாறு, கிழங்கு வகைகள், கீரைகள் போன்றவை நம் வாய்க்கு இன்பம் தருகின்றன.

இயற்கைக் காட்சிகளான மலர்ச் சோலைகள், பலவகை உயிரினங்கள், காடு, மலை, அருவிகள், கடல், சூரியன் போன்றவை நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. மலர்களின் வாசனை, மரங்களின் வாசனை, கனிகளின் வாசனை, இஞ்சி, மஞ்சள் போன்ற உணவுப்பயிர்களின் வாசனை, கரும்பாலைகளில் கரும்புச்சாறு காய்ச்சும்போது ஏற்படும் வாசனை இவை அனைத்தும் நம் மூக்கிற்கு இன்பம் தருகின்றன. பறவைகளின் ஒலி, உழவர்களின் இசை ஒலி, மரங்கள் அசையும்போது எழும் ஒலி, விலங்குகளின் ஒலி என இயற்கை எழுப்பும் பல்வேறு ஒலிகள் நம் செவிக்கு விருந்தாகின்றன.

பிற நன்மைகள்

உணவாக அமைவது மட்டுமன்றி நமக்கு நிழலாகவும் மருந்தாகவும் தாகத்துக்கு நீராகவும் சுவாசிக்கக் காற்றாகவும் இயற்கை உதவுகிறது. விலங்கினங்கள் மனித வாழ்க்கைக்கு பல வகைகளில் உதவுகின்றன. நாம் உயிர்வாழ்வதும் இந்த நிலத்தின் மீதே. நிலம்தான் நம்மைத் தாங்குகிறது.

இவ்வாறு இயற்கை நம் ஐம்புலன்களுக்கும் இன்பம் பயக்கிறது. அது மட்டுமன்றி நம் வாழ்க்கைக்குப் பல வழிகளில் உதவியாக உள்ளது. அந்த இயற்கையைப் பாதுகாப்பதும் நமது கடமை ஆகும்.

- 'புதிய தலைமுறையும் வேளாண்மையும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.

- தயார் செய்த கட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# நயம் பாராட்டுதல்

ஒரு கவிதையில் மறைந்திருக்கும் அழகுகளைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்தி எழுதுதலே நயம் பாராட்டுதல் எனப்படும்.

**நயம் பாராட்டுதலைத் தயார் செய்யும் முறை**

- கவிதையின் மையக் கருத்தினைக் கண்டறிதல்.
- கவிதையில் பொதுவாக இடம்பெறும் நயங்களைக் கண்டறிதல் (எதுகை, மோனை, இயைபு, முரண், அணிநயம்)
- கட்டுரையின் அமைப்பு முறை போன்றே கவிதையின் மையக் கருத்தையும் நயங்களையும் வகைப்படுத்தி முறையாக எழுதல்.

| |
|---|
| மையக்கருத்து |
| சொல் நயம் |
| எதுகை |
| மோனை |
| இயைபு |
| முரண் |
| பொருள் நயம் |
| அணி நயம் |

**மையக்கருத்து**

பாடலின் ஒட்டுமொத்த பொருளையும் தொகுத்து மிகச் சுருக்கமாக எழுதுவதே மையக் கருத்து. தரப்பட்டுள்ள பாடலின் மையக் கருத்தினை மிகச் சுருக்கமாக எழுத வேண்டும்.

**சொல்நயம்**

கவிதையில் கண்டறிகின்ற நயங்களுக்குப் பொருத்தமான விளக்கம் எழுத வேண்டும். நயங்கள் இடம்பெறும் சொற்களைக் கண்டறிந்து எழுத வேண்டும்.

மோனை : அடிதோறும் முதல் எழுத்துகள் ஒன்றுபோல் வருவது மோனை.

எதுகை : அடிதோறும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றுபோல் வருவது எதுகை.

இயைபு : அடிதோறும் இறுதி எழுத்துகள் ஒன்றுபோல் வருவது இயைபு.

முரண் : பாடல் வரிகளில் எதிர்ச் சொற்கள் இடம் பெறுவது முரண்.

பொருள் நயம்

பாடலின் முழு கருத்தையும் தொகுத்து எழுதுதல்.

அணி நயம்

அணி என்பதறகு அழகு என்பது பொருள். உணவுக்கு உப்பு எவ்வாறு சுவையளிக்கின்றதோ அது போன்று ஒரு கவிதைக்கு அழகு சேர்ப்பதில் அணி முக்கிய பங்கு வகிக்கிறது. கவிதையில் இடம்பெறும் அணியைக் கண்டறிந்து அதற்கான விளக்கத்தை எழுதி குறிப்பிட்ட பாடல் வரியையும் எடுத்தெழுதி நிறுவ வேண்டும்.

பின்வரும் நயம் பாராட்டுதல் மாதிரியை உற்று நோக்கிப் புரிந்துகொண்டு தொடர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- பின்வரும் பாடலின் மையக்கருத்தைச் சுட்டிக்காட்டி நயம் பாராட்டுவோம்.

வேப்பிலையைத் தின்னலாம்
விரும்பித் துளசி தின்னலாம்
காப்பதவையே உடல்நலம்
கருதித் தின்றால் கெடலில்லை
பாகற்காயோ கசப்புத்தான்
பழகிப்போனால் சுவைப்புத் தான்
நாவுக்காக வாழாமை
நலத்துக் கான வாழ்வாமே
சோற்றுக்காக வாழ்வதோ?
சுவையைக் கருதி வாழ்வதோ?
கூற்றை வெல்லும் ஆற்றலைக்
கொள்ளலாகும் நா காத்தால்

## நயம் பாராட்டுதல்

கவிஞர் இரா. இளங்குமரன் அவர்கள் எழுதிய பாடலே இது. நமது உடல் நலத்தைக் காக்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. இப்பாடலின் மையக் கருத்து மற்றும் சொல் நயம், பொருள் நயத்தையும் இங்கு காண்போம்.

மையக்கருத்து

நாவுச் சுவைக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் தரும் உணவுகளையே உண்ண வேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்து.

சொல்நயம்

ஒரு கவிதைக்கு மையக்கருத்து எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு சொல் நயமும் முக்கியம். இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு போன்ற நயங்கள் இடம்பெற்று பாடலுக்கு அழகு சேர்க்கின்றன.

எதுகை

பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும். இப்பாடலில்

வேப்பிலை - காப்பதவை
விரும்பி - கருதி
சோற்றுக்காக – கூற்றை ஆகிய எதுகைச் சொற்கள் இடம்பெறுகின்றன.

மோனை

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும். இப்பாடலில்
நாவுச்சுவை - நாளும்
காப்பதவை - கருதி
பாகற்காய் - பழகி
நாவுக்காக – நலத்துக்கான
போன்றமோனைச் சொற்கள் இடம்பெற்று பாடலை அழகாக்குகின்றன.

இயைபு
செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ சீரோ ஒன்றி வருவது இயைபு ஆகும். இப்பாடலில்
தின்னலாம் - தின்னலாம்
கசப்புத்தான் - சுவைப்புத்தான்
வாழ்வதோ - வாழ்வதோ
விரும்புதல் - விரும்புதல் ஆகிய இயைபுச் சொற்கள் இடம்பெறுகின்றன.

பொருள்நயம்

நம் உடல் நலமாக இருக்க வேண்டுமென்றால் நாவுக்கான உணவுக்கு முக்கியத்துவம் தராமல் உடல் நலத்துக்கான உணவுகளை உட்கொள்ள வேண்டும். வேப்பிலை, துளசி, பாகற்காய் போன்றவற்றையும் உணவில் இணைக்க வேண்டும். உடல் நலத்துக்கான உணவை உட்கொண்டால் கூற்றுவனைக் கூட நம்மால் வெல்ல முடியும். இக்கருத்து மிகுந்த நயத்தோடு இப்பாடலில் விளக்கப்படுகிறது.

சிறு பிள்ளைகளும் வாசித்துப் புரிந்து கொள்ளும் விதம் இக்கவிதை எளிமையாக இயற்றப்பட்டுள்ளது. இதன் சொல் நயம், பொருள் நயம் போன்றவை மிக அழகாக உள்ளன.

- பின்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிரதமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

- கா. நமச்சிவாயர்

நயம் பாராட்டுதல்

◆ நயம் பாராட்டுதலைத் தயார் செய்து குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டு படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

## அறிவிப்பு

நாம் பங்கு கொள்ளும் அமைப்பு, பள்ளி, அலுவலகம் போன்றவைகளின் தேவைகளுக்காகவோ நோக்கங்களுக்காகவோ நாம் ஒரு நிகழ்வை நடத்த வேண்டிய சூழல் ஏற்படலாம். அதற்காகத் திட்டமிட்டு அறிவிப்பை உருவாக்க வேண்டும்.

அறிவிப்பை எழுதும் முறை:

- தலைப்பு இடம், நாள், நேரம், சிறப்பு விருந்தினர் போன்ற தகவல்களை உள்ளடக்கி சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

- அறிவிப்பிற்குத் தேவை என்றால் நிகழ்ச்சி நிரலையும் இணைத்துக் கொள்ளலாம்.

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
வரவேற்புரை
தலைமையுரை
சிறப்புரை
வாழ்த்துரை
நன்றியுரை

நிகழ்ச்சிக்கு ஏற்ப நிகழ்ச்சி நிரலிலும் மாற்றம் ஏற்படும்.

- பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் கலைவிழா நடைபெற உள்ளது. இவ்விழாவைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளுமாறு அறிவிப்பு தயாரியுங்கள்.

**அறிவிப்பு**

**மாபெரும் கலைவிழா**

இடம்: அரசு தமிழ் மேல்நிலைப்பள்ளி, சாலை

நாள் : 07.12.2022, காலை 10 மணி

அன்புடையீர்,

எமது சாலை அரசு தமிழ் மேல்நிலைப் பள்ளியில் வருகின்ற 7-ஆம் தேதி புதன் கிழமையன்று காலை 10 மணியளவில் மாபெரும் கலைவிழா நடைபெற உள்ளது. இவ்விழாவில் பள்ளி

மாணவ மாணவியரின் அழகான கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இதில் சிறப்பம்சமாக பள்ளி ஆசிரியர்களின் நாடகமும் நடைபெற உள்ளது. பொது மக்கள் அனைவரும் இவ்விழாவினைக் கண்டு மகிழ வருகை தருமாறு அன்போடு அழைக்கிறோம்.

சாலை,
02.12.2022.

இவண்
பள்ளி இலக்கிய மன்றம்

- பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பாக இரத்த தான முகாம் 12.12.2022 அன்று காலை 10 மணியளவில் நம் பள்ளியில் வைத்து நடைபெற உள்ளது. இவ்விழாவைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் விதம் அறிவிப்பு தயாரியுங்கள்.

**அறிவிப்பு**

**இரத்ததான முகாம்**

- தயார் செய்த அறிவிப்பைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# விமர்சனம்

விமர்சனம் என்பது ஒரு கவிதை, ஒரு கதாபாத்திரம் மற்றும் ஒரு சிறுகதை போன்றவற்றை மதிப்பீடு செய்து முன் வைக்கப்படும் கருத்துகள் ஆகும். நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி ஒரு படைப்பு சமூகத்துக்கு எடுத்துரைக்கும் கருத்துகளையும் அக்கருத்துகளின் மீது தங்களுடைய விமர்சனக் கருத்துகளையும் ஒருங்கிணைத்துக் கூறுவதாகும்.

**கவிதை விமர்சனம்**

கவிதை எந்தெந்த மொழிகளில் இருக்கின்றதோ அங்கு விமர்சனம் இருக்கும். கவிதை சிறப்பாக அமைவதற்கு விமர்சனம் முக்கிய பங்கு வகிக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு கவிதையை விமர்சனம் செய்யும் வேளையில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய கூறுகள் கீழ்வருமாறு:

- கவிதையின் சிறப்பு
- மையப்பொருள் பற்றிய ஒரு பார்வை
- கவிதையில் இடம்பெற்றுள்ள நிறைகள் குறைகள்
- பாராட்டுகள்

உதாரணமாக

"வரைந்த
அன்றே
அழிக்கப்படும் ஓவியங்கள்
மாக்கோலங்கள்"

பொதுவாக நாம் ஒரு காரியத்தைச் செய்யும்போது அதைப் பிறகு அழிப்பதற்காகச் செய்வதில்லை. ஆனால் கோலம் போடும்போது அது அன்றே அழிக்கப்போகிறோம் என்பதைத் தெரிந்தே வரைகிறோம். நம் மனதிற்குச் சாதாரணமாக வராத இந்த எண்ணத்தைக் கூறுவதன்மூலம் இக்கவிதை நம் எதிர்பார்ப்பை ஏமாற்றி நம் மனதைக் கவர்கிறது. மேலும் எத்தனையோ அழகான பொருட்கள் அதிக முயற்சியுடன் சிறிய நேரத்திற்காகச் செய்யப்படுவதை நினைவூட்டவும் செய்கிறது.

**கதை விமர்சனம்**

சிறுகதை என்பது ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை விறுவிறுப்பாய்த் தொடங்கி அதன் தொடர்ச்சியில் நெகிழ்ச்சியில்லாமல் இயங்கி உச்ச நிலைக்குச் சென்று முடிவு வரை படிப்பவரின் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும்.

**விமர்சனம் செய்யும் முறை**

- மையக்கருத்து இடம்பெற்றிருக்க வேண்டும்
- பாத்திரப்படைப்பினைத் தெளிவாக விளக்கிக் கூற வேண்டும்.
- கதை எழுத ஆசிரியர் கையாண்ட உத்திகளைக் கூற வேண்டும்.
- நல்ல மொழிநடையைக் கையாள வேண்டும்.
- படைப்பினை தற்காலச் சூழலோடு பொருத்திப் பார்க்கும் முறை
- படைப்பின் சமூக, அரசியல், கால பண்பாட்டுப் பிண்னனியும் அறிந்து விமர்சனம் செய்ய வேண்டும்.
- சிறுகதையினை விமர்சிக்கும் பொழுது மையக்கருத்து, கதாபாத்திரங்கள், கதை உத்தி, மொழிநடை போன்ற கருத்துகளின் அடிப்படையில் விமர்சனம் செய்வது மிகச் சிறப்பாக அமையும்.
- கதையின் அல்லது படைப்பின் நிறை, குறைகளைத் தகுந்த முறையோடு எடுத்துக்கூற வேண்டும்.
- எக்காரணங்கொண்டும் படைப்பாளியினை மத, இன, மொழி, சாதி அடிப்படையில் சாடுதல் கூடாது.
- படைப்பையும் படைப்பாளியையும் தரம் தாழ்த்திக் கருத்துக்களை வெளியிடுதல் கூடாது.

**மையக்கருத்து**

ஒவ்வொரு சிறுகதையும் ஒரு மையக் கருத்தின் அடிப்படையில்தான் எழுதப்பட்டிருக்கும். அந்தக் கருத்தினைக் கண்டறிந்து மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

**கதாபாத்திரம்**

ஒரு படைப்பு என்ற நிலையில் முன்னிலை வகிப்பது பாத்திரங்களே ஆகும். சிறிய கதை என்பதால் தேவையற்ற பாத்திரங்கள் தவிர்க்கப்பட்டு தேர்ந்தெடுத்த பாத்திரங்களே இடம்பெறுகின்றன. முதன்மைக் கதாபாத்திரத்தை வரையறுத்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும். முதன்மைப் பாத்திரத்தை நோக்கி வாசகனின் கவனம் செல்ல வேண்டும். கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை எடுத்துக் கூறும் வகையில் விமர்சனம் அமைதல் நன்று.

**கதைக் களம்**

கதை நடக்கும் சூழல் காலம் ஆகியவையே கதைக்களம். கதையின் மையக் கருவையும் கதாபாத்திரங்களையும் ஒரு வாழ்க்கைச் சூழலில் நம்பகமாகப் பொருத்திக் காட்டுவது கதைக்கு மிகவும் அவசியம். கதையினை நாம் விமர்சனம் செய்கின்றபோது கதை எங்கே நடக்கிறது எப்போது நடைபெறுகிறது எவ்வளவு காலம் நடைபெறுகிறது ஆகிய வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

**உத்திகள்**

ஒரு சிறுகதை கதை கூறும் கோணத்திலும் சிறந்திருக்க வேண்டும். கதை கூறும் நோக்கத்தை நோக்குநிலை உத்தி என்று கூறுவர். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் என்ற கோணத்திலிருந்து பார்க்கிறார் என்பது முக்கியம். ஆசிரியர் நோக்கு, பாத்திர நோக்கு என்று நோக்குநிலை பல வகைப்படும்.

நனவோடை முறை என்பது வாசகர்களைச் சுண்டி இழுக்கும் ஒரு உத்தியாகவே கருதப்படுகிறது. உள் மனதின் எண்ணங்களை அலையாகக் கிளப்பிவிட்ட நிலை அவற்றிற்குச் சொல் வடிவம் தருவதே நனவோடை உத்தி என்று கூறலாம். பின்னால் நிகழ இருப்பதை முன் உணர்த்துவதும் முன் நிகழ்ந்தவற்றைப் பின் உணர்த்துவதுமாகிய முன்னோக்கு உத்திகளும் பின்னோக்கு உத்திகளும் உள்ளன. நமது பாடப்பகுதியில் இடம்பெறும் கதைகளை விமர்சனம் செய்யும் வேளையில் உத்திகளைப் பற்றிய புரிதல் மாணவர்களுக்கு வேண்டும்.

**மொழிநடை**

மொழிநடை என்பது ஆசிரியருக்கே உரிய தனித்திறன் ஆகும். “நடை என்பது ஒரு ஆசிரியரின் மேற்சட்டை போன்றது அன்று. உடம்பின் தோல் போன்றது” என்று கூறுவார் கார்லைல். பொதுவாக தமிழில்

தூய தமிழ் நடை, கிண்டலும் எள்ளலும் நகைச்சுவையும் நிரம்பிய நடை, ஆற்றொழுக்கான நடை, பேச்சுத்தமிழ் நடை, வட்டார நடை என்று பல வகைகள் உள்ளன. அதில் நாம் விமர்சனம் செய்யும் சிறுகதை எந்த நடையில் எழுதப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி தகுந்த உதாரணங்களுடன் எழுத வேண்டும்.

- மகேஷ்வர் எழுதிய "தவமணி உணர்த்திய உடல் தானம்" என்ற சிறுகதையை விமர்சனம் செய்து எழுதுவோம்.

## விமர்சனம்

**மையக்கருத்து**

இன்றைய காலகட்டத்திற்குத் தேவையான உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கதையின் மையக்கருத்தாகும்.

**கதாபாத்திரங்கள்**

சிறுகதையின் உயிராகவும் கதை நகர்த்துவதற்குக் காரணமாகவும் இருப்பவர்கள் கதாபாத்திரங்கள் ஆவர். இக்கதையில் தவமணி, ஆரூடம், இவர்களின் மகன் கோபால கிருஷ்ணன், இரத்த தானம் செய்த இளைஞன் ஆகிய கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன. தவமணி என்பவர் உடல் தானம் செய்வதில் உறுதியாக இருக்கிறார். அவரைத் தடுக்கும் முயற்சியில் அவரது மகனும் மனைவியும் இருக்கிறார்கள். இறுதியில் ஒரு சூழ்நிலையில் தவமணியின் உடல் தானத்தை ஆதரிக்கும் முடிவுக்கு வருகிறார்கள். தவமணி மற்றும் அவரது மகன் கோபால கிருஷ்ணனின் தியாக மனநிலை நமது மனதில் நிற்கின்றது.

**கதைக்களன்**

இக்கதையானது தவமணியின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வாகவே காட்டப்படுகிறது. ஒரு சாதாரண குடும்பத்து மனிதர்களின் வாழ்க்கை முறையும் மனநிலையும் இங்கு படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. மருத்துவமனையில் அவர்கள் மனம் மாறும் சூழல் ஏற்படுகிறது.

**உத்திகள்**

இக்கதையின் நிகழ்வுகள் யாவும் எந்த இடர்பாடும் இன்றி தொடக்கம் முதல் இறுதி வரை கதையின் போக்கு அமைகிறது. இக்கதை நனவோடை உத்தியுடன் எழுதப்பட்டுள்ளது. அனைவருக்கும் புரியும் வகையில் மிக எளிய நடை கையாளப்பட்டுள்ளது.

**மொழிநடை**

"தவமணி உணர்த்திய உடல் தானம்" என்ற சிறுகதையின் மொழிநடை படித்தவர்கள் முதல் சாதாரணமானவர்கள் வரை வாசிக்க முடிகின்ற விதத்திலும் புரிய முடிகின்ற விதத்திலும் எளிமையான ஆற்றொழுக்கு நடையில் எழுதியுள்ளார்.

- "மனித நேயம் கடைச்சரக்கல்ல" என்ற கதையைத் திறனாய்வு செய்வோம்.

## விமர்சனம்

- தயார் செய்த விமர்சனத்தைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.